2017 ஜூலை 6]

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்றழைக்கப்படும் கோயம்புத்தூர் அனைத்து தொழில் வளங்களும் நிறைந்த ஒரு நகரமாகும். அங்கு அதிகப்படியான வெளிநாட்டவர்களும், வெளி மாநிலத்தவர்களும் தொழில்புரிந்து வருகின்றார்கள். அவர்களின் வசதிக்காகத்தான், படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியைத் தொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும் கலந்தாலோசித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியதற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

விளையாட்டு மைதானம்

***1214—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு வல்வில் ஓரி உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரண்டி பிடித்த கைகளை கணினி பிடிக்கச் செய்தவர்; இரு விரல்கள் கொண்டு வாய்ப்பாட்டை பேனாவில் எழுதியவர்களை, 10 விரல்கள் கொண்டு ஐபேடில் ஐயமின்றி எழுத வைத்தவர், எங்கள் அதிசயத் தலைவி அம்மா அவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்கி, என்னுடைய பதிலைத் தெரிவிக்க விழைகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு வல்வில் ஓரி அரசு உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 217 மாணவர்களும், 250 மாணவிகளும், ஆக மொத்தம் 467 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். தற்போது பள்ளியின் முன்புறம் உள்ள சுமார் 50 சென்ட் இடத்தை விளையாட்டு மைதானமாக அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக தான் வாழ்ந்த காலத்தில், 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அல்லும்பகலும் அயராது உழைத்து, பாடுபட்டு, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று, இன்று நம்மைவிட்டுப் பிரிந்தாலும், நம் மனதில் என்றென்றும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற நம்முடைய தெய்வம், இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். அம்மா அவர்கள் வழியில் அம்மா அவர்களுடைய அரசின் திட்டங்களை தமிழக மக்களுக்காகக் கொண்டுசேர்க்கும் விதமாக அயராது பாடுபட்டு வரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேந்தமங்கலம் தொகுதியில், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில்,

2017 ஜூலை 6]

100-க்கு 99 சதவீதம் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மலைப்பகுதி மக்கள் பொருளாதார வாழ்க்கையிலும், அடிப்படைத் தேவைகளிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை உணர்ந்த, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்கள்மூலம் அனைத்தையும் நிறைவேற்றித் தந்து, மலைவாழ் மக்களை வாழவைத்து, நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார்கள்.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், வாழவந்திநாடு, வல்வில் ஓரி அரசு உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 450-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். அங்கு விளையாட்டு மைதானம் இல்லாத நிலை உள்ளது. அந்தப் பள்ளிக்குச் சொந்தமான 29 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர் நிலம் மட்டும்தான் பள்ளி நிருவாகத்திடம் உள்ளது. மீதமுள்ள 19 ஏக்கர் நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, கிரிக்கெட் மைதானம், கால்பந்து மைதானம், கைப்பந்து மைதானம் ஆகியவற்றை அமைத்தும், பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடங்களைக் கட்டியும், பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டியும், பள்ளியின் நுழைவு வாயிலின் சிறப்பான தோற்றத்தில் வல்வில் ஓரி மன்னனுடைய வில் ஆற்றலைக் குறிக்கின்ற வகையில் முகப்பை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பள்ளியின் முன்புறம் நிலம் இருக்கிறது என்றும், அந்த இடத்தை மைதானமாக அவர்கள் பயன்படுத்தி வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். கொல்லிமலையில் இருக்கின்ற 14 ஊராட்சிகளுக்கும் தலைமையிடமாக விளங்குகின்ற பகுதியில் அமைந்த மிகப் பழமை வாய்ந்த பள்ளி இந்தப் பள்ளி. ஊரக விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு, அனைத்து கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து விளையாடுவதற்கு ஏற்ற இடமாக அந்தப் பள்ளி இருக்கின்ற காரணத்தினால், அங்கிருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி, அனைத்து விளையாட்டுத் தளங்களையும் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,134 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும், 312 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகள் அனைத்திற்கும் அடிப்படை வசதிகள் முதல் அத்தியாவசிய வசதிகள் வரை உள்ள அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிட ஆண்டுதோறும் வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றன. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள பள்ளியில் ஏற்கெனவே சுமார் 50 சென்ட் நிலப்பரப்பில் விளையாட்டு மைதானம் இருந்துவருகிறது. தேவையின் அடிப்படையில், மேலும் வசதிகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வசதிகள் செய்து தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு, பழங்குடியினருக்கென தனியாக பள்ளியை அமைத்து இயக்குவதுபோல, பழங்குடியின மாணவ, மாணவிகள் உயர் கல்வியைப் பயில வசதியாக அவர்களுக்கென தனியாக அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த இனிய வேளையில், நூற்றாண்டு விழாவின் நாயகராக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

தமிழ்நாட்டிலே எங்கிருந்து வேண்டுமானாலும் சென்று, அங்கு கல்வி பயிலலாம் என்ற அடிப்படையில், கொல்லிமலையில் உள்ள பழம்பெரும் பள்ளியில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும் வசிக்கின்ற மாணவர்கள் கல்வி கற்று, வாழ்க்கையிலே உயர்ந்திருக்கிறார்கள். அனைத்து மலைப் பகுதிகளிலும் இருக்கின்ற மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெறுவதற்காக அரசு கலைக் கல்லூரிக்குச் செல்கின்ற நேரத்தில், அவர்களுக்கு

விடுதிகளில் இடம் கிடைப்பதில்லை. எனவே அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மலைவாழ் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்ற வகையில், பழங்குடியினருக்காக தனியாக ஒரு கலைக் கல்லூரியை அங்கே அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பழங்குடியினருக்கென தனியாக கல்லூரி கேட்டிருக்கின்றார். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை உயர் கல்வித் துறை சம்பந்தப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 11–15

2. தனது உடல் நலம் குறித்து விசாரித்தோருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் நன்றி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உடல் நலம் பெற்று, மீண்டும் அவைக்கு வந்து, இந்த அவையை நடத்துகிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல சூழ்நிலையைப் பெற்றமைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*